2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

கலைக் கல்லூரிகள்.

*291 வினா—**திரு. மே. சி. தூயமணி**: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில், அரசினர் கலைக்கல்லூரி அமைக்கு முகத்தான் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மற்ற விண்ணப்பங்களுடன் இந்த விண்ணப்பமும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை.

திரு. மே. சி. தூயமணி: தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரில் ஒரு அரசினர் கலைக் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. எனவே, அந்தக் கோரிக்கையை இந்த ஆண்டிலாவது நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்திருக்கின்றன. பல்கலைக் கழகங்களைக் கலந்து கொண்டு, எந்தந்த இடங்களில் ஆரம்பிக்க வேண்டும், அதற்கான நிபந்தனைகள் நிறைவேறியிருக்கின்றனவா என்பதுபற்றி யெல்லாம் கண்டறிய வேண்டும். அது அநேகமாக ஏப்ரல், மே திங்களில்தான் முடியும். அதுவரையில் இது பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

*292 வினா—**திரு. ஜி. ராமசாமி**: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.